திருக்கழுக்குன்றம் நத்தம் கரியசேரி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை :திரு.E.சேகர்

நக.எண். 25/2024 நாள் : 24.10.2024

பொருள் : மனைப்பிரிவு செங்கல்பட்டு மாவட்டம் - திருக்கழுக்குன்றம் ஒன்றியம் நத்தம் கரியசேரி ஊராட்சி திருக்கழுக்குன்றம வட்டம் நத்தம் கரியசேரி கிராமம்- சர்வே எண். 286/1, 286/2, 286/3, 291/3A2, 291/4A1B- ல் 7797 ச.மீ 1.92 ஏக்கர் பரப்பளவில்குடிமிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1. இணை இயக்குநர் / துணை இயக்குநர், மாவட்ட நகர் மற்றும் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் கடிதம் நக.எண். 207 / 2024
2. தானப்பத்திரம் பதிவு எண்.7333/2024, நாள் 13.09.2024,
3. இவ்வலுவலக கடித நக.எண். 23.09.2024
4. ஊராட்சி மன்ற தீர்மானம் எண். 25, நாள் 14/10/2024
5. E-Challan Dated: 14.10.2024 Rs.5,000/-
6. E-Challan Dated: 23.10.2024 Rs.93,080/-.,

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம் நத்தம் கரியசேரி கிராமம் - சர்வே எண்.286/1, 286/2, 286/3, 291/3A2, 291/4A1B -ல் 7797 ச.மீ 1.92 ஏக்கர் பரப்பளவில் மனைபிரிவு அமைக்க மனுதாரரின் கோரிக்கை பரிசீலனை செய்து பார்வை - 1ல் காணும் ஊரக ஊரமைப்பு குறிப்பிட்டுள்ளது. மேலும், மனுதாரர் திரு.S.பிரகாஷ் மற்றும் M.பாலகிருஷ்ணன் என்பவர் வழங்கிய வில்லங்க சான்றுபடி 7797 ச.மீ 1.92 ஏக்கா நிலப்பரப்பிற்கு மட்டுமே மனைப்பிரிவு அமைக்க திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்குண்டான கட்டணம் ரூ.98080/- பெறப்பட்டு ஊராட்சியின் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. தானபத்திரம் எண். 7333/2024, நாள் 13.09.2024ன் படி சாலை மற்றும் பொது இடங்கள் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. மேலும், ஒப்படைக்கப்பட்ட சாலைகளின் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

ஒதுக்கீடு விவரம்	அளவுகள்
மனைப்பிரிவு இடத்தின் பரப்பு	7797 ச.மீ (1.92 ஏக்கர்)
கோரிய மனைகள்	43
ஒதுக்கிய மனைகள்	43
பொது உபயோகம்	0.53%
TANGED CO	0.52%

எனவே, கீழ்காணும் மனைப்பிரிவு விவரங்களின் அடிப்படைமில் 43 மனைகளுக்கு கீழ்காணும் நிபந்தனைகளின் படி மனைப்பரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

நிபந்தனைகள்

1. தெருவிளக்கு கம்பங்களில் மின்விளக்குகள் LED விளக்குகள் அமைக்கப்பட்டு A4 size கலர் புகைப்படம் வழங்கபடுதல் வேண்டும்.
2. தெரு குழய்களில் தினமும் குடிநீர் வருவதை உறுதி செய்ய வேண்டும். உரிய குழாய் அமைப்பில் A4 size கலர் புகைப்படம் வழங்கபடுதல் வேண்டும்.
3. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பொதுமக்கள் அறியும் வண்ணம் மனைப்பிரிவு வரைபடத்துடன் அமைத்த விளக்க விளம்பர பலகை அமைக்க வேண்டும்.
4. RM AVENUE என்று பெயரிடப்பட்ட மனைப்பிரிவு அனுமதியின் மீது தணிக்கை தடை எழுப்பப்படுமாயின், எழுப்பப்படும் தணிக்கைத் தடைமில் குறிப்பிடப்படும் அனைத்து கட்டணங்கள் மற்றும் விவரங்களுக்கும் தாங்கள் பொறுபேற்க வேண்டும்.
5. RM AVENUE என்று பெயரிடப்பட்ட மனைப்பிரிவின் அனுகு சாலை குறித்து பிற்காலத்தில் ஆட்சேபணைகள் எழுமாயின் உரிய அனுகு உறுதிபடுத்தப்பட வேண்டியது மனைப்பிரிவு உரிமையாளரின் கடமையாகும்.
6. தமிழ்நாடு ஊராட்சிக்கு சட்டம் 1994 பிரிவு 166-ன் படி மனைப்பிரிவில் குடிநீர் விநியோகம் குறித்து வசதிபடுத்துதல் வேண்டும். பிரிவு 158-ன் படி பொது சுகாதாரம் பேணிகாத்தல் வேண்டும். பிரிவு 161-ன் படி வடிகால் பாதுகாக்கப்பட வேண்டும். பிரிவு 174 முதல் 179 வரை மறறும் 189, 191, 199 ஆகிய பிரிவுகளின் படி மனைப்பிரிவுகளில் உள்ள சாலை, குடிநீர், வடிகால், தெருமின் விளக்கு ஆகியவை தவறாமல் பின்பற்ற வேண்டியது மனுதாராரின் கடமையாகும்.
7. மனைப்பிரிவு அமைந்துள்ள நிலம் குறித்து பிற்காலத்தில் ஆட்சேபணைகள் எழுப்பப்படுமாயின் மனைப்பிரிவு உரிமையாளர் முழு பொறுப்பேற்க வேண்டும். தவறினால் மனுதாரர் மீது நடவடிக்கை மேற்கொண்டு உரிய நிர்வாக ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. மாவட்ட நகர்ப்புற மற்றும் ஊரக ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அனுமதியில் வழங்கிய சிறப்பு நிபந்தனைகளின்படி மனைப்பிரிவை நிவர்த்தி செய்ய கடமைப்பட்டவராவரார். மேலும் நிலம் வகை மாற்றம் குறித்து ஊராட்சி ஊரமைப்பு துறையின் 26.08.2022 திட்ட அனுமதி உத்திரவில் தெரிவிக்கப்படவில்லை நிலவகை மற்றும் குறித்த மனுதாரரின் Under taking படி நில வகை மாற்றம் செய்யப்படவில்லையெனில் இந்த மனைபிரீன் இறுதி ஒப்புதல் முழுவதுமாக இரத்து செய்யப்படும்
9. மேற்காணும் 1 முதல் 8 வரையிலான நிபந்தனைகள் மனைப்பிரிவு உரிமையாளர் கவனம் ஈர்க்கப்படுகிறது. மேற்காணும் நிபந்தனைகளின்படி மனைப்பிரிவு உரிமையாளர் உட்படுதல் வேண்டும். தவறினால் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும் என தொவிக்கப்படுகிறது.

தலைவர்

தலைவர்
நத்தம் கரியசேரி ஊராட்சி
திருக்கழுக்குன்றம் ஒன்றியம்
செங்கல்பட்டு மாவட்டம்.

பெறுநர்
திரு

S.பிரகாஷ் & M.பாலகிருஷ்ணன்
137, பஜனை கோவில் தெரு,
நத்தம் கரியசேரி
Ph : 9025471887

நகல்
1. நகர் மற்றும் ஊராட்சி ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner